Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No. 164/2022 Date:12.02.2026
Deposition of witness for prosecution: PW5 ( LW8)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | சுந்தரராமன் | Village | உத்தமபாளையம் |
| Father/ Husband Name | நாராயணன் | Taluk | உத்தமபாளையம் |
| Age | 50 /2026 | Calling | மோட்டார் வாகன ஆய்வாளர் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 12.02.2026 TIME 04.30 **PM**

எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

நான் தற்போது உத்தமபாளையம் வட்டார கோட்டா வாகன ஆய்வளர் நிலை–II ஆக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.06.2022 ம் தேதி 15.40 மணிக்கு நான் பணியில் இருந்த போது உத்தமபாளையம் காவல்நிலைய குற்ற எண் 169/22 இதச பிரிவு 279, 337, 304(A) வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 60 BZ 7652 Hero Honda Splender plus வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டி வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று 01.06.2022 ம் தேதி அலுவலகத்தில் வைத்து மேற்படி வாகனத்தை ஆய்வு செய்து, வாகனத்தின் சேதத்தையும், நிலையையும் குறிப்பு எடுத்து மேற்படி விபத்தானது இயந்தி கோளாரினால் ஏற்படவில்லை என அறிக்கை வழங்கினேன். மோட்டர் வாகன ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.3** ஆகும்.

கடந்த 01.06.2022 ம் தேதி 15.55 மணிக்கு நான் பணியில் இருந்த போது உத்தமபாளையம் காவல்நிலைய குற்ற எண் 169/22 இதச பிரிவு 279, 337, 304(A) வழக்கில் சம்மந்தப்பட்ட வாகனமான TN 07 CT 7732 Eicher வாகனத்தை ஆய்வு செய்து அறிக்கை தரவேண்டி வரப்பெற்ற வேண்டுகோள் கடிதத்தை பெற்று 01.06.2022 ம் தேதி அலுவலகத்தில் வைத்து மேற்படி வாகனத்தை ஆய்வு செய்து, வாகனத்தின் சேதத்தையும், நிலையையும் குறிப்பு எடுத்து மேற்படி விபத்தானது இயந்தி கோளாரினால் ஏற்படவில்லை என அறிக்கை வழங்கினேன். மோட்டர் வாகன ஆய்வு அறிக்கை **அ.சா.ஆ.4** ஆகும். ஆய்வாளர் விசாரித்தார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

TN 60 BZ 7652 Hero Honda Splender plus என்ற வாகனத்தின் ஓட்டுநர் விக்கி என்ற விக்னேஷ் என்பவரது ஓட்டுநர் உரிமம் சமர்ப்பிக்கப்படவில்லை என்றால் சரிதான். போலிசார் அறிக்கை வேண்டி சமர்ப்பிக்கும் வேண்டுகோளுடன் முதல் தகவல் அறிக்கை இணைத்து கொடுப்பார் என்றால் சரிதான். இவ்வழக்கில் விபத்து நடந்த இடத்தை நான் அறிக்கையை போலிசாரிடம் ஒப்படைப்பதற்கு பின்போ அல்லது முன்போ பார்வையிட்டேனா என்றால் இல்லை.

கவனக்குறைவாக எனது அறிக்கையை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. வாகனங்கள் ஆய்வுக்காக காலதாமதமாக சமர்ப்பிக்கப்பட்டால் தாமதத்திற்கான காரணம் குறித்து விளக்கம் கேட்க வேண்டும் என்று எனது கடமை என்றால் சரியல்ல. ஆய்வாளரின் வேண்டுக்கோளுக்கு இணங்க வாகங்களை ஆய்வு செய்யாமல் அறிக்கை மட்டும் கொடுத்தேன் என்றால் சரியல்ல.

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார். Sd/P. Kamarasu

நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.